மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 48.

(இ) 48 இளநிலை ஆசிரியர்களில் 42 ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டது. 6 ஆசிரியர்களுக்கு மட்டும் இன்னமும் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படவில்லை.

(உ) ஒரே நிலையில் பல்வேறு நிர்வாகங்களின் கீழ் செய்த பணியினைக் கணக்கில் கொண்டு 10 ஆண்டு காலம் பணிசெய்து முடித்துள்ள ஆசிரியர்களுக்கு கல்வித்துறையின் 20—6—1974 நாளிட்ட அரசு ஆணை எண் 1009-ன் படி தேர்வு நிலை வழங்கும்படி புதுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி முதன்மைக்கல்வி அலுவலர் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

Teachers working in Schools run by the Pudukkottai Municipality.

***235 Q.—Thiru K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 51, on the floor of the Council on 18th December 1974—**

(*a*) the number of Secondary Grade Teachers, working in the schools run by the Pudukkottai Municipality who had completed 10 years of regular qualified service as Secondary Grade Teachers, prior to 1st April 1974, who had worked in the Higher Grade Vacancies and who are later absorbed in the upgraded Secondary Grade posts ;

(*b*) whether it is a fact that the said category of teachers who are eligible for promotion to Selection Grade cadre as per G.O. Ms. No. 1009, Education, dated 20th June 1974, have not been granted Selection Grade Scale of Pay ; and

(*c*) if so, the action proposed to be taken thereon?

திரு. கே. எஸ். கணபதி: 18—12—1974-ல் சட்ட மன்ற மேலவையில் வினா எண் 51-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1974-க்கு முன்னர், தொடக்க நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி, முறையாக இடைநிலை ஆசிரியர்களாக 10 ஆண்டுப் பணியை முடித்துள்ளவர்களும், பின்னர் பதவித்தரம் உயர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் புதுக்கோட்டை நகராட்சியினால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரிவர்களுமான இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) கல்வித் துறையின் 20—6—1974 நாளிட்ட 1009 ஆம் எண் அரசாணையின்படி தேர்வுத்தர ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுள்ள மேற்படி ஆசிரியர்களுக்குத் தேர்வுத்தர சம்பளவீதம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அதையொட்டி என்ன நடவடிக்கை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது?

1975 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 28.

(இ) 28 இடைநிலை ஆசிரியர்களில் 26 ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டது. 2 ஆசிரியர்களுக்கு மட்டும் இன்னமும் தேர்வுநிலை ஊதியம் வழங்கப்படவில்லை.

(உ) ஒரே நிலை பல்வேறு நிர்வாகங்களின் கீழ் செய்த பணியினைக் கணக்கில் கொண்டு 10 ஆண்டு காலம் பணி செய்து முடித்துள்ள ஆசிரியர் களுக்குக் கல்வித் துறையின் 20—6—1974 நாளிட்ட அரசு ஆணை 1009-ம் படி தேர்வு நிலை வழங்கும்படி புதுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுரைகள் வழங்கி யுள்ளார்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இந்த வினாவை எழுப்பிய பிறகுதான் இந்த 26 ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆகவே, இதுபோன்ற காலத்தாழ்வு ஏற்படாது இருப் பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கான வினா எழுப்புவதும், விடை பகர்வதும் இம்மாதிரிக் காலத்தாழ்வு ஏற்படாது இருப்பதற்குரிய கூறுபாடுகளாக அமைந்திருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இடை நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி, பிறகு அந்த வாய்ப்பு இல்லா மல் தொடக்க நிலை ஆசிரியர்களாகவும், இளநிலை ஆசிரியர்களாகவும், சில நேரங்களிலே 'ரிவர்ஷன்' ஆகி மீண்டும் இடைநிலை ஆசிரியர்களாகவும் வந்து பணியாற்றுகிறார்கள். இப்படி இருக்கும்போது இடைநிலை ஆசிரியர்கள் ரிவர்ஷனுக்கு முன்னால் பணியாற்றிய ஊழியக் காலமும் இந்த பத் தாண்டு சர்வீஸுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா? இதுபோல் தமிழாசிரியர்களாக இருக்கின்றவர்கள் முதல்நிலை தமிழாசிரியர்களாக நீண்டகாலம் பணியாற்றுகிறார்கள். மீண்டும் ஒரு நிர்வாக மாற்றம் வரும் பொழுது, இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக முதலில் நிய மிக்கப்பட்டு, பின்னர் சீனியாரிட்டிபடி முதல் நிலைக்கு வருகிறார்கள். அவர்கள் முதலில் பணியாற்றிய காலமும், பின்னர் பணியாற்றிய கால மும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய முழு விவரம் இல்லை. நிலையாகவேதான் முதலிலே பணியாற்றினார்களா என் றும், பின்னரும் நிலையாகத்தான் பணியாற்றினார்களா என்றும் பார்த்து, அதை வைத்துத்தான் நாம் கணக்கிட வேண்டும். அப்படியிருந்து பின்னர் கீழே இறக்குவதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் காண வேண்டும். இது பற்றி தனித்தனியாக ஆராய வேண்டும். தற்காலிகமாக இருந் தால், தற்காலிகம் என்று தான் கணக்கெடுக்க வேண்டும். நிரந்தரமாக முதலிலே இருந்து, இடையிலே விடுபட்டு, மறுபடியும் நிரந்தரமாக இருக்குமேயானால், அதைத் தனியாக ஆராயலாம்.